நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.74 /2020
**அரசு தரப்புக்காக அ. சா.1 சாட்சியின் சான்றுரைகள்**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில்/ பதவி | |
| தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.1 | | | |

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day of June 2025.

**<u>முதல் விசாரணை</u>–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.34)

நான் தற்போது கடலூர், செல்லங்குப்பத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன சபீனா எனது மகள். ஆஜர் எதிரிகளை தெரியும். 23.01.2019 ஆம் தேதி எனது மகளை 1–ம் எதிரிக்கு திருமணம் செய்து கொடுத்தேன். எனது மகளுக்கு சீர் வரிசையாக 36 பவுன் நகைகள், ஒன்றரை கிலோ வெள்ளி பொருட்கள், டுவீலர், பிரிட்ஜ், டிவி ஆகியவற்றிற்காக ரொக்க தொகையாக ரூபாய் இரண்டு லட்சம் ஆகியவற்றை 1–ம் எதிரியும் அவரின் பெற்றோர்களான 2, 3 எதிரிகள் கேட்டார்கள். இதைஎல்லாம் கொடுத்தால் தான் தாலி கட்டமுடியும் என்று சொன்னார்கள். தற்போது கொடுக்கமுடியவில்லை. கல்யாணம் நடக்கட்டும் ஒருவாரம் கழித்து கொடுக்கிறோம் என்று சொன்னோம். அதன்பிறகு திருமணம் நடந்தது. எனது மகள் எதிரிகள் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார். எனது மகளுக்கு திருமணத்தின்போது 36 பவுன் நகைகள், ஒன்றரை கிலோ வெள்ளி ஆகியவற்றை கொடுத்தேன். ரூபாய் இரண்டு இலட்சம் தொகையை மட்டும் என்னால் திருமணத்தின்போது கொடுக்கமுடியவில்லை. நான் சிங்கபூருக்கு சென்றுவிட்டு ஒரு மாதம் கழித்து வந்து ரூபாய் 2 லட்சம் தருகிறேன் என்றும் அதுவரை எனது மகளை எதுவும் செய்யவேண்டாம் என்று சொல்லிவிட்டு சிங்கபூருக்கு சென்றுவிட்டேன். திருமணம் ஆன ஒரு மாதத்திற்குள்ளாகவே கையில் காயங்களுடன் புகைப்படங்கள் அனுப்பியதாகவும் எப்படி ஆனது என்று கேட்டதற்கு கீழே

விழுந்துவிட்டதாகவும் கூறினார். உடனே எனது மனைவியை எனது மகளை சென்று பார்க்குமாறு கூறினேன். எனது மனைவி மகளின் வீட்டிற்கு சென்று மகளை அழைத்து எங்கள் வீட்டிற்கு வந்தார். பிறகு எங்கள் உறவினர்கள் இந்த பிரச்சனை சம்மந்தமாக ஆஜர் எதிரியிடம் கேட்டபோது எதிரிகள் உங்கள் பெண்ணை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதாக உறவினர்கள் என்னிடம் சொன்னார்கள். திருமணம் ஆன மூன்று மாதங்களில் எனது மகளுக்கு விவாகரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பினார்கள். இதை போன் மூலம் என்னிடம் எங்கள் வீட்டில் சொன்னார்கள். எனது மனைவியும் எனது மகளும் மகளிர் காவல் நிலையத்திற்கு சென்றபோது புதுச்சத்திரம் காவல்நிலையத்திற்கு போக வேண்டும் என்று சொல்லி விட்டார்கள். புதுச்சத்திரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து பேசும்போது 1–ம் எதிரி எனது மகளை வேண்டாம் என்று பிரித்து விடுங்கள் என்று சொன்னதாக எனது மனைவி என்னிடம் சொன்னார். எதிரிகள் மூவரின் காலில் எனது மகள் விழுந்தபோது 2–ம் எதிரி எட்டி உதைத்து என் வீட்டிற்கு வர தகுதி இல்லை நாயே என்று சொன்னதாக என் மனைவி என்னிடம் சொன்னார். காவல்நிலையத்தில் இருந்து திரும்பவந்து 2 வாரங்கள் எனது வீட்டில் இருந்தபோது எனது மகள் 1–ம் எதிரி பாவேந்தனுக்கு போன் மேல் போன் செய்தார் என்றும் அவர் எடுக்கவில்லை என்றும் சொன்னார்கள். அந்த மனஉளைச்சலில் இருந்த என் மகள் 01.10.2019 ஆம் தேதி எலி பேஸ்டை தின்றுவிட்டு இருந்ததால் கடலூர் அரசு மருத்துவமனைக்கு கூட்டிச்சென்று அதன்பிறகு சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு என் மனைவியும் அவருடைய உறவினர்களும் கூட்டிச்சென்றார்கள். அங்கு தீவிர சிகிச்சைக்குப் பின்னரும் 05.10.2019 தேதியில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். 03–ஆம் தேதி நான் சிங்கப்பூரில் இருந்து வந்தேன். எனது மகள் இறந்தபிறகு நான் கடலூர் முதுநகர் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அதன்பிறகு என் மகளின் உடலை என்னிடம் கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் கொடுத்தது தான். (அந்த புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த சாட்சி பதிவின் ஆரம்பம் முதல் இருந்த வழக்கறிஞர்.திரு.A,அசோக் தன்னுடைய மூத்த வழக்கறிஞர் திரு.K.சிவராஜ் வெளியூர் சென்று விட்டதாகவும் குறுக்கு விசாரணைக்காக ஆவணங்கள் தேவைப்படுவதாகவும் கண்ணுற்ற சாட்சிகளுடன் இந்த சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்றும் எதிரி தரப்பு வழக்கிறஞரின் தனிப்பட்ட அசௌகரியம் காரணமாக குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்குமாறு கேட்டு குவிமுச பிரிவு 231(2) –ன் கீழ் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு சம்பவம் 2019 ஆம் ஆண்டு நடைபெற்று முதல் தகவல் அறிக்கை 2019 ஆம் ஆண்டு பதிவு

செய்யப்பட்டுள்ளது. 23.15.2020 ஆம் தேதியன்று குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு தொடர்ந்து சாட்சி விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டு பலமுறை விசாரணை நடவடிக்கைகள் வழங்கப்பட்டு இறுதியாக 16.05.2025 ஆம் தேதியில் விசாரணை நடவடிக்கை வழங்கப்பட்டு இன்று விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையில் வழக்கறிஞரின் ஒத்திவைப்பு கோரிக்கை மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்கிறது.

**மறு விசாரணை** இல்லை
(முடிக்கப்பட்ட நேரம் 12.57 )

2025 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

/Sd/–G.KULASEKARAN
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.